1993 மார்ச் 16]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பி. ஈஸ்வரமூர்த்தி.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய் குறைவாக மிகவும் பின் தங்கிய பேரூராட்சிகளைக் கொண்ட கிராமங்களை இரண்டு கிராமப் பஞ்சாயத்துக்களாக வருமான அடிப்படையிலே பிரிக்க இயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வருவாய் அடிப்படையில் கிராமங்களைப் பிரிப்பது உள்ளாட்சித்துறை அமைச்சரிடம் வரவேண்டியது.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாயை நாங்கள் கணக்கிலே எடுத்துக்கொள்கிறோம். பரப்பளவையும் எடுத்துக்கொள்கிறோம். சில இடங்களில் கிராமங்களில் வீடு தெருத்தெருவாக ஒன்றாக இருக்கும். சில இடங்களில் கிராமங்களில் ஒரு தோப்புக்கு ஒரு வீடு இருக்கும். அப்படி இருந்தால் அதனுடைய விஸ்தீரணம் அதிகமாக இருக்கும். நிர்வாக வசதியை விட-நிர்வாக வசதியை மனத்தில் வைத்துக்கொண்டு இந்த அரசு அதை மேற்கொள்ளும் என்பதைவிட—மக்களுடைய வசதியை மனத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்னைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 84, திரு. க. அர்ச்சுனன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

84--

தாரமங்கலம் பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தல்.

* *14486*-**திரு. க. அர்ச்சுனன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் விடைகளுக்கு விடையளிப்பாரா-

(அ) தாரமங்கலம் பெண்கள் உயர்நிலைப் பள்ளி, மேல் நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

[1993 மார்ச் 16

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : 1992-93-ல் இயலாது. அரசின் நிதி நிலைக்கேற்ப உரிய காலத்தில் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

முற்பகல் 10.15

திரு. க. அர்ச்சுனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் பெண்கள் கிண்டல் செய்யப்படுகின்ற காரணத்தால், பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக ஆக்கவேண்டுமென்று சொல்லி அரசுக்கு செலுத்த வேண்டிய கட்டணத்தையும், அதற்கு வேண்டிய அடிப்படைத் தேவைகள் அத்தனையையும் பூர்த்தி செய்து கொடுத்திருக்கிற காரணத்தால் வருகிற நிதி ஆண்டிலாவது இது மீண்டும் பரிசீலிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோல் நிறைய கோரிக்கைகள் பல்வேறு ஊர்களிலிருந்து வந்திருக்கின்றன. அவைகளை எல்லாம் சேர்த்து முன்னுரிமைப் பட்டியல் ஒன்று தயாரித்து அதன்படிதான் நாம் போடவேண்டியிருக்கும். அப்போது தாரமங்கலம் பெண்கள் உயர்நிலைப்பள்ளிப் பற்றி பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இரா. பழனிசாமி.

திரு. இரா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியினுடைய தலைமையிடமான தாரமங்கலத்தில் தனியார் கல்வி நிறுவனத்தின் மூலம் அங்கே மேல்நிலைப் பள்ளி நடைபெற்று வருகிறது. அந்தப் பள்ளியினுடைய அணுகுமுறை சரியாக இல்லாததால் அந்தப் பகுதியில் வசதி அற்ற ஏழை மக்கள் எல்லாம் சேர்ந்து படிக்க முடியாத நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது. **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்தில் அதுபோன்று ** சொல்லுவது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. இரா. பழனிசாமி: முழுத் தொகையையும் இந்த ஆண்டு அந்தப் பள்ளியினுடைய பெற்றோர்-ஆசிரியர் சங்கம் செலுத்தியிருக்கிறது

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

1993 மார்ச் 16]

வருகின்ற நிதி ஆண்டிலாவது கருணை உள்ளத்தோடு அங்கே மேல்நிலைப் பள்ளியை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே பதில் சொல்லியிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 85,* திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

85-

அரசு மருத்துவமனைகளில் குடும்ப நல அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளும் தாய்மார்களுக்கு அடையாள அட்டை வழங்குதல்.

** 13823*–**திரு. ஆர். சிங்காரம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா–

அரசு மருத்துவனைகளில் குடும்ப நல அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளும் தாய்மார்களுக்கு அடையாள அட்டை வழங்கி சிகிச்சை அளிக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இத்திட்டம் 1985-86 முதல் வழங்கப்பட்டு வந்தது. இத்திட்டம் 1991-92-ம் ஆண்டு முதல் நிறுத்தப்பட்டுவந்தது. தற்பொழுது அறுவைச் சிகிச்சை செய்துகொள்ளும் தாய்மார்களுக்கு மாவட்ட அளவில் தங்கக் காசுகள் வழங்கும் பரிசுத்திட்டம் மாநில அரசால் கொண்டுவரப்பட்டு நடைமுறையில் உள்ளது.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டம் கைவிடப்பட்டதாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்தத் திட்டத்தின் வாயிலாக குடும்பக் கட்டுப்பாடு ஆப்பரேஷன் செய்யப்பட்ட தாய்மார்களுக்கு இதன் விளைவாக ஒரு சில தாய்மார்களுக்கு சைடு எபக்ட்டினால் பாதிக்கப்பட்டவர்கள் மீண்டும் சிகிச்சை செய்கின்றபோது அவர்களுக்கு அந்த உரிமை வழங்கப்படுவது இல்லை. மேலும் நிரந்தரமாக